
# பிசாசினால் அலைக்கழிக்கப்பட்ட ஒரு சிறுவனை இயேசு குணப்படுத்தினார்

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, இயேசுவின் அதிகாரத்தினாலும், இரக்கத்தினாலும் தீய ஆவிகளிடம் இருந்து நீர் எங்கள் பிள்ளைகளை காப்பீர் என்று அவர்கள் உம்மை விசுவாசிக்க உதவுவீராக."

வயதுக்கும் தேவைக்கும் பொருத்தமான எந்த குழந்தைகளின் கல்வி செயல்பாட்டையும் தெரிந்து கொள்க.



பெரிய பிள்ளை அல்லது ஆசிரியர்: **மாற்கு 9:14-29** லிருந்து ஒரு சிறுவனை இயேசு எவ்வாறு குணமாக்கினார் என்பதைக் கூறவும் அல்லது வாசிக்கவும். இந்தக் கதை, சாத்தானின் அனைத்து சக்திகளுக்கும் மேலான அதிகாரம் உடையவர் இயேசு என்பதை விளக்குகிறது.

கதையை கூறிய பின், கீழ்காணும் **கேள்விகளைக் கேட்கவும்** (பதில்: அடைப்புக்குள் காணப்படும் வசனத்தில்)

- இயேசு வந்து சேர்ந்த போது சீஷர்கள் என்ன செய்து கொண்டு இருந்தனர்?
  *(ஜெபிப்பதற்குப் பதிலாக அவர்கள் வாதம் புரிந்து கொண்டு இருந்தனர், வச. 14)*
- பிசாசால் சிறுவன் எவ்வாறு துன்பப்பட்டான்? *(17-18 & 22)*
- சாத்தானின் வல்லமையை எதிர்த்து நிற்க நாம் என்ன செய்ய வேண்டும்? *(விசுவாசம் வச. 23)*
- தேவனை விசுவாசிக்க நமக்கு உதவுவது யார்? *(24)*
- யாருடைய வல்லமையால் நாம் சாத்தானை எதிர்த்து நிற்க முடியும்? *(ஜெபத்தின் மூலமாக வரும் தேவ வல்லமையால். வச. 29)*

ஒரு சிறுவனை அலைக்கழித்த பிசாசை இயேசு எவ்வாறு மேற்கொண்டார் என்ற **கதையை நாடகமாக்குக.** சபைத் தலைவரோடு பேசி இந்த நாடகத்ததை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும். நாடகத்தை தயாரிப்பதில் பிள்ளைகளோடு உங்கள் நேரத்தை செலவிடவும். எல்லா பகுதிகளையும் உபயோகிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. **பெரிய பிள்ளைகள்** சிறிய பிள்ளைகளுக்கு உதவவும்.

- **கதை கூறுபவர், தந்தை** ஆகிய வேடங்களை பெரியவர்களோ பெரிய பிள்ளைகளோ ஏற்கட்டும். கதை கூறுபவர்: பிள்ளைகள் பேச/நடிக்க வேண்டியதை நினைப்பூட்டி கதைச் சுருக்கத்தைக் கூறுபவர்.
- **சிறுவன், அம்மா, சகோதர சகோதரிகள்** வேடங்களை **சிறிய பிள்ளைகள்** ஏற்கட்டும்.



**கதை கூறுபவர்:** மாற்கு 9:14-21 ல் இருந்து கதையின் முதல் பகுதியைக் கூறவும். பின் கூற வேண்டியது, "தந்தை கூறுவதைக் கேளுங்கள்."

**தந்தை** : (வீட்டுக்குள் வந்து கொண்டே) "மகனைப் பார்த்தீர்களா?"

**சிறுவன்** : "இயேசு என்னை குணப்படுத்தி விட்டார். நீங்கள் அவரை சந்திக்க வேண்டும என்று நான் விரும்புகிறேன்!"

**அம்மா** : "உண்மையாகவா! அவன் குழந்தையாய் இருந்ததில் இருந்தே ஒரு பிசாசு அவனை அலைக்கழித்தது அல்லவா?"

**சகோதரர்களும் சகோதரிகளும்:** "அது எவ்வளவு கொடுமையானது"

"அவன் கீழே விழும்போது வாயில் நுரை தள்ளுமே."

"சில சமயம் அவன் தீயிலும் நெருப்பிலும் விழுந்து விடுவான்."

"அவன் பலமுறை செத்துப் பிழைத்திருக்கிறான்!"

"நான் கதறியிருக்கிறேன்!"

**தந்தை** : "யாராலும் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை. இயேசுவின் சீஷர்களிடம் கேட்டேன். அவர்களாலும் எதுவும் செய்ய முடியவில்லை."

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும் (மாற்கு 9:23-29).

**பின்** : "தந்தை கூறுவதைக் கேளுங்கள்"

**தந்தை** : "நான் இயேசுவிடம் உதவி செய்யுமாறு கேட்டேன். அவர் செய்தார்."

**அம்மா** : "இவனைக் குணப்படுத்த இயேசு என்ன செய்தார்?"

**தந்தை** : "முதலில் அவர், விசுவாசிப்பவர்களுக்கு எல்லாம் கூடும் என்று கூறினார். ஆனால் என்னுடைய விசுவாசம் பலவீனமாய் இருந்தது. அதனால் முதலில் விசுவாசிக்க உதவும்படி கேட்டேன்."

**பையன்** : "பிசாசு என்னை கீழே தள்ளி அலைக்கழித்தது. அது என்னை அலற வைத்தது. நான் செத்துப் போய்விட்டதாக எல்லோரும் கூறினர்."

**அம்மா** : பையனை அணைத்துக்கொண்டு, "ஓ! பாவம், என் பையன்!"

**பையன்** : "இயேசு பிசாசிடம், போய் விடுமாறும், திரும்பி வரக் கூடாது என்று கூறினார். இயேசு என் கையைப் பிடித்து தூக்கி விட்டார்!"

**அம்மா** : "தேவனுக்கே மகிமை உண்டாவதாக"

**பையன்** : "என்னால் இப்போது தெளிவாகப் பேச முடிகிறது!"

**அம்மா** : "சீஷர்களால் உன்னை ஏன் குணப்படுத்த முடியவில்லை?"

**அப்பா** : "அவர்கள் தேவ வல்லமையை நம்பவில்லை என்றும் ஜெபிக்கவில்லை என்று இயேசுகூறினார்!"

**சகோதரர்களும் சகோதரிகளும்:** இவ்வாறாகக் கூறுகின்றனர்:

"நாங்கள் இயேசுவை நம்ப விரும்புகிறோம்"

"எங்கள் விசுவாசத்தை பலப்படுத்தும்படி அவரிடம் கேட்க விரும்புகிறோம்!"

"தீய ஆவிகள் எல்லாவற்றையும் விட இயேசுவுக்கு அதிக வல்லமை உண்டு!"

**கதை கூறுபவர் அல்லது ஒரு பெரிய பிள்ளை:** நாடகம் முடிந்தவுடன் உதவிய யாவருக்கும் நன்றி கூறவும்.

**பிள்ளைகள்** பெரியவர்களுக்கு இந்த நாடகத்தை நடத்திக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் பெரியவர்களிடம் கேட்கவும்.

இயேசு சாத்தானின் பிடியில் இருந்து மக்களை விடுவித்தது பற்றிய வேறு உதாரணங்களைக் கூறுமாறு பிள்ளைகளிடம் பெரியவர்களிடமும் கேட்கவும்.



**ஜெபித்துக்** கொண்டிருக்கும் ஒரு நபரின் **படத்தை வரைக.** பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும்.

- ஆராதனை வேளையில் படத்தைப் பெரியவர்களிடம் காட்டி, இயேசுவின் வல்லமையினால் நாம் சாத்தானின் வல்லமையை எதிர்த்து நிற்க முடியும் என்பதை இது சித்தரிக்கிறது என்று விளக்கம் அளிக்கவும்.

- கீழே விழுந்து கிடக்கும் பையனின் படத்தை வரைந்து வண்ணம் தீட்டலாம்.

- **பெரிய பிள்ளைகள்,** கல்லறை, சவப்பெட்டி, அல்லது மரணத்தை குறிக்கும் ஒரு அடையாளத்தை வரைந்து, இயேசு, சாத்தானையும், தீய ஆவிகளையும் மட்டுமின்றி, மரணத்தையும் வென்றார் என்று விளக்கவும்.

**பெரிய பிள்ளைகள்,** இயேசு சாத்தானிடம் இருந்து நம்மை எவ்வாறு விடுவிக்கிறார் என்பதை பற்றி கவிதை, பாடல் அல்லது நாடகம் எழுதட்டும்.

**சங்கீதம் 3:3-5** ஐ மூன்று பிள்ளைகள் ஒப்புவிக்கட்டும்.

**மனப்பாடம்:** யாக் 4:7.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, நீர் ஒருவரே எல்லாம் வல்லவர். சாத்தானின் பிடியில் இருந்து எங்களை நீர் விடுவிக்கிறீர். உமது அன்பில் இருந்து எதுவும் எங்களைப் பிரிக்க முடியாது. நாங்கள் உம்மை நேசிக்கிறோம். எங்கள் நண்பர்களிடம் உம்மைப் பற்றி கூற உதவுவீராக."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net